# எது இஸ்லாமிய ஷரீஅத் சட்டம்?

அபூ அப்தில்லாஹ்

உத்திர பிரதேச மாநிலம் முசாபர் நகரைச் சேர்ந்தவர் நூர் இலாஹி இவருடைய மனைவி இம்ரானா (வயது 28) இம்ரானாவை நூர் இலாஹிஇயன் தந்தை அலி முஹம்மது கற்பழித்து விட்டார். விளைவு தேவ்பந் நகரிள்ள தாருல் உலூம் கல்வி நிறுவன மார்க்க அறிஞர்கள் 'இம்ரானா கணவருடன் சேர்ந்து வாழும் உரிமையை இழந்த விட்டார். எனவே அவர் கணவருடன் சேர்ந்து வாழக்கூடாது' என மதத்தீர்ப்பு (ஃப்தவா) அளித்துள்ளதாக ஊடகச் செய்திகள்.

இதே கருத்தை அகில இந்திய முஸ்லிம் சட்ட வாரியமும் அங்கீகரித்து தீர்ப்பு வழங்கியுள்ளது என்றும், இது பற்றி சட்ட வாரிய உறுப்பினர் ஒருவர் "கணவரின் தந்தையே மருமகளை கற்பழித்த காரணத்தால் இம்ரானாவுக்கும் நூர் இலாஹிக்கும் இடையேயான திருமண உறவு ரத்தாகிவிடும். இதுவே இஸ்லாமிய ஷரீஅத் சட்டம்" எனக்கூறியுள்ளதாகவும் செய்திகள் பரப்பப்படுகின்றன. இப்படி செய்தி ஊடகங்கள் அனைத்தும் கூறுகின்றன.

இந்த இஸ்லாமிய மதத் தீர்ப்பானது அறிவு ஜீவிகளிடையேயும், மனிதம் போற்றும் மனித நேயர்களிடையேயும், ஆனாதிக்கத்தை வெறுக்கும் ஆண், பெண் அறிஞர்களிடையேயும் பெரியதொரு கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. இவர்களின் இந்த மதத்தீர்ப்பை எதிர்த்து பல மொழிகளில் வெளிவரும் பல்வேறு தினசரிகளில் கடுமையான கண்டனங்கள் வெளிவந்துள்ளன. இந்த மதத்தீர்ப்பை உச்ச நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதி ஏ.எம். அஹமதியும் கடுமையாக விமர்சித்துள்ளார். உண்மையிலேயே நடுநிலையோடு சிந்திக்கும் எந்தச் சீரிய சிந்தனையாளரும் இவர்களின் இந்த மதத்தீர்ப்பை விமர்சிக்காமல் இருக்க முடியாது. எனவே ஏகன் இறைவன் அருளிய தூய வாழ்க்கை நெறியான இஸ்லாமிய ஷரீஅத் இப்படிப்பட்ட பிற்போக்குத் தனமான சட்டத்தைச் சொல்கிறதா? என்பதை ஆய்ந்து தெளிந்து விளங்குவது அவசியமாக இருக்கிறது.

இப்போது நாம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டியது, தேவ்பந்து தாருல் உலூம் அரபி மதரஸாவும், அகில இந்திய முஸ்லிம் சட்ட வாரியமும் "இஸ்லாமிய ஷரீஅத்" என்று கூறுவதாக ஊடகங்கள் கூறுவது உண்மையிலேயே இறைவனின் இறுதி வேதமான அல்குர்ஆன் கூறும் 'இஸ்லாமிய ஷரீஅத்' சட்டமா? அல்லது இறைவனின் இறுதித் தூதரின் மறைவுக்குப் பிறகு மார்க்க அறிஞர்கள் என்று தங்களை த் தாங்களே கூறிக்கொள்ளும் இவர்களின் கற்பனையில் உருவான 'இஸ்லாமிய மத ஷரீஅத்' சட்டமா? என்பதைத்தான்.

என்று இந்த மனிதனை அகில உலக மக்களுக்கும் ஒரே இறைவனான இறைவன் படைத்தானோ அன்றிலிருந்து மனித வர்க்கத்திற்கு அந்த இறைவன் கொடுத்து அருளியது "தூய வாழ்க்கை நெறி" அதுவே இஸ்லாமிய ஷரீஅத். இதில் நடுநிலையாளர்கள் யாராம் எக்குறையும் காண முடியாது.

ஆனால் இறைவனின் இறுதித்தூதரின் மறைவுக்குப் பிறகு மிக குறுகிய காலத்தில், முஸ்லிம் சமுதாயத்தில் சட்ட விரோதமாக ஊடுருவிய இந்த ஆலிம் உலமா வர்க்கம் தங்களின் சுய நலம் காரணமாக "இஸ்லாமிய ஷரீஅத்" என்ற பெயரால் கற்பனை செய்துள்ள இஸ்லாமிய மத ஷரீஅத்தில்தான் எண்ணற்ற குறைபாடுகள் மலிந்து காணப்படுகின்றன. ஆலிம் உலமாக்கள் உண்டாக்கிய இஸ்லாமிய மதத்தில்தான் பெண்களின் உரிமைகள் பெருதும் பறிக்கப்பட்டு அவர்கள் அடிமைகளாக போகப் பொருளாகக் கருதப்பட்டு வருகின்றனர்.

ஆலிம் உலமா வர்க்கத்தினர் 'இஸ்லாமிய ஷரீஅத்' என்ற பெயரால் கற்பனை செய்து வைத்துள்ள சட்டங்களில் பெண்களுக்கு இழைக்கப்பட்டு அநீதிகளைப் பட்டியலிட்டுத் தருகிறோம். பார்வையிடுங்கள் :

**1.** முதற் கண் பெண்கள் கல்வி அறிவு பெறும் உரிமையை இந்த உலமா வர்க்கத்தினர் பறித்துள்ளனர். அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பு எதற்கு? என்ற அடிப்படையில் பெண்களுக்கு கல்வி அறிவு மறுக்கப்படுகிறது.

**2.** போவது உண்மையிலேயே பெண்தானா? அல்லது திருடனா? காமுகனா? என்று கண்டறிய வகையில்லாவது ஆண் அடையாளம் காட்டும் முகத்தையும் புர்கா என்ற பெயரால் மூடித்தான் செல்ல வேண்டும் என்று சட்டம் இயற்றியுள்ளது. தான் பெற்ற மகளே அந்நிய ஒரு ஆணுடன் புர்கா அணிந்த நிலையில் கைகோர்த்துச் சென்றாம் தந்தையே இனம்காண முடியாத அவல நிலை.

**3.** கணவன் ஆத்திரப்பட்டோ, அவசரப்பட்டோ, வேடிக்கையாகவோ தலாக், தலாக், தலாக் என்று முறை ஒரே நேரத்தில் சொல்லிவிட்டாம், கணவன் மனைவி உறவு முறிந்துவிடும். மீண்டும் அவர்கள் இணைந்து வாழ முடியாது என்று சட்டம் இயற்றி வைத்துள்ளது.

**4.** உடறவின் போதோ, வேறு சந்தர்ப்பத்திலோ கணவன் மனைவியின் மார்பகத்திலிருந்து பால் குடித்து விட்டால் அவள் தாயாகி விடுகிறாள்; எனவே தொடர்ந்து கணவன் மனைவியாக வாழ முடியாது என்று பால்குடி பருவ சட்டத்தை, கணவன், மனைவி வாழ்க்கையில் கூறி கற்பனையைப் புகுத்துவது.

**5.** மணப்பெண்ணுக்கு மணமகன் மணக்கொடை எனும் 'மஹர்' கொடுத்து மண முடிப்பதற்கு மாறாக மணப்பெண்ணிடமிருந்து வரதட்சணை, சீர், செனத்தி என தலைக்கீழ் பாடமாக நடைமுறைப்படுத்துவதுடன், வலீமா எனும் மணவிருந்தை மணமகனே கொடுக்கும் கடமை இருந்தும், இந்த வலீமாவிலிருந்து உட றவுக்குப் பின்னரே கொடுக்கவேண்டும் என இந்த ஆலிம் உலமாக்கள் சட்டம் இயற்றி திருமண விருந்தையும் பெண்ணே கொடுக்கும் கொடுமையையும் நடைமுறைப்படுத்தி வைத்திருக்கிறார்கள்.

**6.** ஆண் தலாக், தலாக், தலாக் என ஆத்திரத்தில் அவசத்தில் தலாக் ஒரே நேரத்தில் சொன்னாம் கணவன், மனைவி உறவு முறிந்து விடும் என மதச்சட்டம் இயற்றி வைத்திருப்பவர்கள், பெண் தனது கணவனுடன் வாழ விரும்பாவிட்டாம் கணவன் பெரும் கொடுமைக்காரணாக இருந்தாம் அவளது கணவன் அவனாக தலாக் சொல்லாத நிலையில் பிரிய முடியாது. ஊர் ஜமாஅத்தாரும் அந்த திருமண உறவை முறிக்க முடியாது. கணவன் பிரிதொரு பெண்ணை மணந்து அவருடன் வாழ்ந்து கொண்டு, முன்னய மனைவியை வாழ, வெட்டியாக வைத்திருந்தாம் அவன் அவனுடைய மனைவி என்ற நிலையில்தான்

சாகாமல் சாகவேண்டும் அவனிடமிருந்து பிரிந்து மறுமணம் முடிக்க முடியாது என்று மதச்சட்டம் இயற்றி வைத்திருப்பது.

7. கணவன் மனைவிக்குத் தேவையான உணவு, உடை, உறைவிடம், உறவு இவற்றில் எதையும் கொடுக்கா விட்டாம், அவன் எங்கிருக்கிறான் என்ற தகவலே தெரியாதிருந்தாம், மனைவி தன் வாழ் நாள் எல்லாம் (90 வருடங்கள்) காத்திருக்க வேண்டும். அவனிடமிருந்து பிரிந்து வேறு திருமணம் முடிக்க அவருக்கு உரிமை இல்லை. வாழ்நாள் முழுவதும் வாழ

வெட்டியாக வாழ்ந்து மடிய வேண்டும் என்று சட்டம் இயற்றி வைத்திருப்பது.

8. இதே வரிசையில்தான் பெண்ணினத்திற்கு அநீதி இழைக்கும் வகையில் மாமனார் பலாத்காரமாக கற்பழித்து விட்டதால், மருமகளின் திருமண உறவு இரத்தாகி விட்டது. மீண்டும் அவன் தனது கணவனுடன் வாழ முடியாது என்று மதத் தீர்ப்பு வழங்கி இருக்கிறார்கள்.

இறைவனின் இறுதி வேதமான அல்குர்ஆனையும், இறுதித்தூதரின் ஆதாரப்பூர்வமான நடைமுறைகளையும் இவர்கள் நேரடியாகப் பார்த்து சிந்தித்தால் இப்படிப்பட்ட அநீதமான தீர்ப்புகளை வழங்கமாட்டார்கள். முன்னைய இறைத்தூதர்களான முஸா(மோஸஸ்) ஈஸா (யேசு) தாவூது (டேவிட்) போன்றவர்களின் போதனைகளின் நடப்பதாகச் சொன்னவர்கள் எப்படி அந்த இறைத்தூதர்கலின் நேர்மையான போதனைகளை கோட்டை விட்டு விட்டு, பின்னால் வந்தவர்களின் கற்பனைகளை எடுத்து நடப்பது போல், இன்றைய முஸ்லிம் சமுதாயத்தை வழி நடத்திச் செல்வதாகச் சொல்லிக் கொள்ளும் இந்த ஆலிம் உலமாக்களும் இறுதி வேதம் அல்குர்ஆனினதும், இறுதித் தூதரின் அசலான போதனைகளை கோட்டை விட்டு விட்டு, பின்னால் வந்தவர்கலின் கற்பனைகளை வேதவாக்காக எடுத்து நடப்பதாலேயே இப்படி அறிவுக்கே பொருந்தாத அநீதியான மதச்சட்டங்களை 'ஃபத்வா' என்ற பெயரில் மதத்தீர்ப்பளிக்கின்றனர்.

முன்னோர்கள் மூதாதையர்களின் நடைமுறைகளை மார்க்கமாக எந்த நிலையிம் எடுத்து நடக்கக்கூடாது என்று இறைவனின் இறுதி வேதம் பல்வேறு இடங்களில் ஆணித்தரமாக எடுத்துரைத்துக் கொண்டிருக்கும் இறைவனின் அந்த எச்சரிக்கைகளை முதுகுக்குப் பின்னால் தூக்கிப் போட்டு விட்டு, முன்னோர்கள், மூதாதையர்கள் பின்னால் இந்த ஆலிம் உலமாக்கள் செல்வதின் காரணமே, அவர்கள் மார்க்கத்தை மதமாக்கி அதைப் பிழைப்பாக்கிக் கொண்டதுதான்.

இறைவனின் இறுதி வழிகாட்டி நூலான அல்குர்ஆனின் 2:170, 5:104, 7:28,70,71, 10:78, 11:62,87,109, 12:40, 14:10, 21:53,54, 26:74,76, 31:21, 34:43 37:69, 43:22,23, 53:23 இன்னும் இவைபோல் பல குர்ஆன் வசனங்களை முதுக்குப் பின்னால் தூக்கி எறிந்து விட்டு, இந்த குர்ஆன் வசனங்களின் கட்டளைக்கு முரணாக இமாம்கள், பெரியார்கள், நாதாக்கள், அவுலியாக்கள் போன்ற பெயர்களால் முன்னோர்கள் மூதாதையர்கள் சொன்னதாக, செய்ததாக கற்பனைகளை அளந்து விட்டு இவர்களாக இஸ்லாமிய ஷரீஅத் என்ற பெயரால் மனிதச்சட்டம் இயற்றி வைத்திருப்பதால்தான். இப்படிப்பட்ட அறிவுக்கே பொருந்தாத பெண்ணினத்திற்கு பெரும் துரோகம் இழைக்கும் கொடும் சட்டங்களை இயற்றி வைத்திருக்கிறார்கள்.

மற்றபடி குர்ஆன், ஹதீஸை நேரடியாகப் பார்த்து அவற்றில் உள்ளது உள்ளபடி சட்டம் சொன்னால்

இப்படிப்பட்ட ஹிமாலயத் தவறுகளை ஒரு போதும் செய்யமாட்டார்கள். குறிப்பிட்ட இந்த விவகாரத்தில் உண்மையிலேயே அந்தப் பெண்ணின் மாமனார் தனது மருமகளையே கற்பழித்திருந்தால், அந்தப் பெண் எந்த வகையிம் குற்றவாளி ஆக மாட்டாள் என்பதை கீழ் வரும் குர்ஆன் வசனங்கள் உறுதிப்ப டுத்துகின்றன.

"........ தங்கள் கற்பைப் பேணிக்கொள்ள விரும்பும் பெண்களை விபச்சாரத்திற்கு நிர்ப்பந்திக்காதீர்கள். அப்படி எவனேனும் அந்தப் பெண்களை நிர்ப்பந்தித்தால் அவர்கள் நிர்பந்திக்கப்பட்டபின் நிச்சயமாக அல்லாஹ் மன்னிப்பவனாகவும், கிருபையுடையவனாகவும் இருக்கிறான்". *அல்குர்ஆன் : அந்நூர் 24:33*

"எவருடைய உள்ளம் விசுவாசத்தைக் கொண்டு அமைதி கொண்டிருக்கும் நிலையில், யார் நிர்ப்பந்திக்கப்ப டுகிறாரோ அவரைத்தவிர (அவர்மீது குற்றம் இல்லை)." அல்குர்ஆன் அந்நஹ்ல் : 16:106

"நிர்பந்தத்தின் காரணமாக ஒருவர் தவறு செய்தால் அவர் குற்றம் பிடிக்க மாட்டார்" என நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். அறிவிப்பவர் : அபூதர் அல் கிஃப்பாரி, *நூல்கள் : புகாரீ, இப்னுமாஜா*

தவறான முறையில் உடறவு கொண்டால் அதற்கு தண்டனை உண்டே அல்லாமல், அந்த உடறவின் மூலம் உறவுமுறை கொண்டாடுதல், சொத்துரிமை கோருதல், ஏற்கனவே உள்ள உறவைத் துண்டித்தல் போன்றவை இஸ்லாமிய ஷரீஅத்தில் அனுமதிக்கப்பட்டவை அல்ல.

(பார்க்க : அல்குர்ஆன் 25:54 மற்றும் புகாரீ (ர.அ) 2053, 2218, 2421, 2533, 2745, 4303, 6749, 6819)

மார்க்கத்தைப் பிழைப்பாகக் கொண்டுள்ள புரோகித மவ்லவிகள் தங்களின் சுய ஆதாயத்திற்காக நேர்வழியை கோணல் வழியாக ஆக்குவதிலேயே குறியாக இருப்பார்கள். எனவே அல்குர்ஆனில் நேரடியாகக் கூறி இருப்பது அவர்களின் புத்தியில் உறைக்காது. அதிலிருந்து இவர்கள் சொந்தமாக யூகம் செய்து கோணல் வழிகளைக் கண்டு பிடித்து ஆதாயம் அடைவதிலேயே இவர்கள் குறியாக இருப்பார்கள் என பலமுறை நாம் எழுதி இருக்கிறோம்.

இந்த விவகாரத்திம் அவர்கள் தேர்ந்தெடுத்துள்ள கோணல்வழியை இங்கு கவனிப்போம் :

"...... உங்கள் தந்தைகள் திருமணம் செய்து கொண்ட பெண்களில் எவரையும் (உங்கள் தந்தையின் மரணத்திற்குப்பின்) நீங்கள் திருமணம் செய்து கொள்ளாதீர்கள்......" அல்குர்ஆன் : அன்னிஸா 4:22

இந்த இறைவாக்கில் 'நகஹ' என்ற அரபி பதம் இடம் பெற்றுள்ளது. அதிலிருந்து வந்ததுதான் 'நிகாஹ் திருமணம்' பொதுவாக திருமண உறவு குறித்தே இப்பதம் இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஆனால் ந்த 'நகஹ' பதத்திற்கு 'உறவு கொள்ளுதல்' என்ற பொருளும் அரபி அகராதியில் உண்டு. எனவே இந்தப் புரோகித மவ்லவிகள் தங்கள் சுய ஆதாயத்திற்காக நேர்வழியை விட்டு கோணல் வழியைத்தேடும் அவசத்தில் இந்த 4:22 இறைவாக்கில் 'நகஹ' என்ற அரபி பதம் இடம் பெற்றிருக்கிறது. 'நகஹ' என்றால் உடறவுதான். எனவே மாமனார் மருமகளுடன் உடறவு கொண்டு விட்டதால் அவள் தனது கணவனுக்கு ஹராமாகிவிட்டாள். எனவே அவள் தனது கணவனோடு தொடர்ந்து வாழ முடியாது என்று மதத்தீர்ப்பு

அளித்து விட்டனர். ஆனால் இந்த 4:22 இறைவாக்கு சட்டப்படியான ஆகுமான உடறவைக் குறிக்கிறதே அல்லாமல், கற்பழிப்பையோ, விபச்சாரத்தையோ குறிக்கவில்லை என்பதை இந்த சுயநல புரோகித மவ்லவிகள் அறியத் தவறி விட்டனர்.

இந்த பெண் இம்ரானா விவகாரத்தில் மாமனார் கற்பழித்து விட்டார் என்ற ஒரு செய்தியும், இம்ரானாவும் விரும்பியே தவறு நடந்தது என்ற பிரிதொரு செய்தியும் ஊடகங்களில் பரப்பப்படுகிறது. உண்மையிலேயே அப்பெண் மாமனாரால் கற்பளிக்கப்பட்டிருந்தால், கொடுந் தண்டனைக்கு உரியவர் மாமனார் மட்டுமே. மருமகளிடம் எந்தத் தவறுமில்லை. அவள் தண்டிக்கப்படக் கூடாது என்பதே அல்குர்ஆன் 24:33, 16:106 இறைவாக்குகள் நிரூபிக்கும் உண்மையாகும்.

எனவே அவள் தனது கணவனுடன் தொடர்ந்து வாழ்வதில் இறைவன் அருளிய இஸ்லாமிய ஷரீஅத்தில் தடை அணுவளவும் இல்லை என்பதே உண்மையாகும். மாறாக அப்பெண்ணும் உடன்பட்டு விபச்சாரம் நடந்திருந்தால் மாமனார், மருமகள் இருவருமே கொடும் தண்டனைக்கு ஆளாக்கப்படவேண்டும். அதற்கு இந்தப் புரோகித மவ்லவிகளுக்கு அதிகாரம் இருந்தால் அதை நிறைவேற்றட்டும். அந்த அதிகாரம் அவர்களிடம் இல்லை என்றால் அவர்கள் மௌனம் காப்பதே சிறப்பு. மூடத்தனமான மதத்தீர்ப்பு அளிக்க வேண்டாம் என்பதே மனித நேயம் போற்றும் அறிவாளிகள் கோரிக்கையாகும்.

அந்தப் பெண் விபச்சாரத்தில் ஈடுபட்டிருந்தால் கூட அல்குர்ஆன் 4:22 இங்கு பொருந்தாது. 4:22 இறைவாக்கு கூறுவது சட்டப்பூர்வமான அனுமதிக்கப்பட்ட உடறவைத் தான். மற்றபடி சட்டத்திற்குப் புறம்பான விபச்சாரத்தில் ஏற்படும் உடறவை அல்ல. எனவே மாமனாரும் மருமகளும் விரும்பி விபச்சாரத்தில் ஈடுபட்டிருந்தாம். இந்தத்தவறான நிகழ்வு சட்ட பூர்வமாக அவரது மகனுடன் கணவன் மனைவியாக வாழ்ந்து கொண்டிருப்பதைத் தடுக்காது; முறிக்காது. இதையே, "ஒரு ஹராம் (தடுக்கப்பட்ட செயல்) ஹலாலை (ஆகுமாக்கப் பட்டதை) தடை செய்யாது" என்று இப்னு அப்பாஸ், ஸுஹ்ரி, முஜாஹித், ஸயீத், இப்னு ஜுபைர், இன்னும் பல அறிஞர்கள் கூறியுள்ளனர். ஆதாரம் : புகாரீ (ர.அ) 5105

உத்திர பிரதேசத்தைச் சேர்ந்த இம்ரானா விவகாரம் நாட்டை குக்கி அடங்குவதற்குள் அஸ்ஸாம் மாநிலத்தில் ஒரு பேதைப் பெண்ணின் இது போன்றதொரு செய்தி கசிந்து வருகிறது. அந்தப்பெண்ணும் தனது மாமனார் தன்னை கற்பழித்து விட்டதாகப் புகார் கூறியுள்ளார். அதன் காரணமாக உள்ளூர் புரோகித மவ்லவி கொடுத்துள்ள மதத்தீர்ப்பு இப்பெண்ணின் வாழ்க்கையை இருளடையச் செய்துள்ளது.

ஆக இப்படிப்பட்ட அநீதங்கள், பெண்ணினத்துக்கு இழைக்கப்படும் பெருங்கொடுமைகள் ஆங்காங்கே நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. ஒழுக்கங்கெட்ட ஆண்வர்க்கத்தினர் செய்யும் கொடுமை ஒரு பக்கம். அதைச்சாட்டி இந்தப் புரோகித மவ்லவிகள் கொடுக்கும் மதத்தீர்ப்பு கொடுமையிம் கொடுமை. பெண் ணினத்தையே கொத்தடிமையாக்கும் கொடுமை.

பெண்ணினத்திற்கு இழைக்கப்பட்ட இன்னொரு பெருங்கொடுமையைப் பாருங்கள். குடியா என்ற பெண் ணின் கணவன் நீண்ட காலமாகக் காணாமல் போய் விட்டான். அவனைப்பற்றிய எவ்வித தகவம் இல்லை. உணவு, உடை, இருப்பிடம் போன்ற எந்த அத்தியாவசியத் தேவையும் கணவன் தரப்பிலிருந்து அப்பெண் ணுக்குக் கிடைக்கவில்லை. நீண்ட காலத்திற்குப் பிறகு அவளது கணவன் இறந்து விட்டான் என்ற

நினைப்பில் அப்பெண்ணுக்கு ஊரார் வேறு திருமணம் செய்து வைத்துள்ளனர். அப்பெண் புதிய கணவருடன் வாழ்ந்து கர்ப்பமும் ஆகிவிட்டாள். இந்த நிலையில் முன்னய கணவன் வந்து சேர்ந்திருக்கிறான். இந்த விவகாரம் இந்த புரோகித மவ்லவிகளின் மதத்தீர்ப்புக்கு கொண்டு செல்லப்பட் டுள்ளது. வழமையான அவர்களின் கோணல் தீர்ப்பின் படியே, கர்ப்பிணியான அப்பெண்ணை இரண்டாவது கணவனை விட்டுப் பிரித்து முன்னய கணவனுடன் வாழும்படி மதத்தீர்ப்பு அளித்துள்ளனர். இந்தத் தவறு நடந்ததற்குக் காரணம் என்ன?

ஆண் தலாக், தலாக், தலாக் என ஒரே மூச்சில் அவசரத்தில் ஒரே நேரத்தில் தலாக் சொன்னாம் கணவன் மனைவி உறவு முறிந்து விடும். மீண்டும் அவர்கள் கணவன் மனைவியாக வாழ முடியாது. ஆனால் அதற்கு மாறாக கணவன் எவ்வளவுதான் கொடுமைக் காரணாக இருந்தாம், ஊன், உடை, இருப்பிடம் கொ டுக்கா விட்டாம் இருக்கும் இடம் தெரியாமல் காணாமல் போய் விட்டாம் அப்பெண் கணவனிடமிருந்து புரிய முடியாது. 90 ஆண்டுகள் அவனுக்கா காத்திருக்க வேண்டும். இதுதான் இந்தப் புரோகித ஹனஃபி மவ்லவிகளின் மதத்தீர்ப்பு.

ஆனால் இந்த விவகாரத்தில் கணவன் காணாமல் போய் நீண்ட காலமாக ஆகிவிட்டதால், அவன் இறந்திருப்பான் என்ற நம்பிக்கையில் இரண்டாவது திருமணம் ஊராரால் நடத்தி வைக்கப்பட்டுள்ளது. ஆனால் அவர்களின் எண்ணத்திற்கு மாற்றமாக முதல் கணவன் உயிருடன் திரும்பி வந்து விட்டதால், இரண்டாவது கணவனுடன் உள்ல திருமண உறவை முறித்து மீண்டும் முதல் கணவனுடன் வாழ அப்பெண் ணை நிர்ப்பந்தப் படுத்தியுள்ளனர்.

ஆணுக்கு எப்படி தனக்குப் பிடிக்காத மனைவியிடமிருந்து ‘தலாக்’ மூலம் பிரிந்து விட இஸ்லாமிய மார்க்கம் அனுமதிக்கிறதோ அதே போல் தனக்குப் பிடிக்காத கணவனிடமிருந்து புரிந்து கொள்ளும் உரிமை பெண் ணுக்கு இருக்கவேண்டும். இதுவே நியாயமாகும். அகில உலக மக்களுக்கும் ஒரே இறைவனின் அறுதி வழிகாட்டி நூலான அல்குர்ஆன் இறைவாக்கும் இதையே உறுதிப் படுத்துகிறது. ஆனால் ஆண் சுயமாக 3 தவணைகளில் ‘தலாக்’ கூறி

மனைவியைப் பிரியும் உரிமை பெற்றிருக்கிறான். பெண் ஊர் முக்கியஸ்தர்களிடம் முறையிட்டு விவாக வி டுதலை (குழாவு) பெறும் உரிமை பெற்றிருக்கிறான். ஒரு பெண் தனது கணவன் பிடிக்காமல் அவனிடமிருந்து பிரிவதில் உறுதியாக இருந்தால் அவன் முறையிடும் ஊர் முக்கியஸ்தர்கள் அவனை கணவனிடமிருந்து பிரித்து விடக்கடமைப்படிருக்கிறார்கள்.

ஆனால் ஹனஃபி மத்ஹப் புரோகித மவ்லவிகளிடம் இது எடுபடாது. கணவன் தலாக் கூறினால் அல்லாமல் மனைவி அவனிடமிருந்து பிரிய முடியாது என்ற மூடத்தனமான மனித சட்டத்தை நடைமுறைப்ப டுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

மேலே குறிப்பிட்ட குடியா என்ற பெண்ணின் சம்பவத்தில் கூட முதல் கணவன் இறந்து விட்டான் என்ற தவறான நம்பிக்கையிலேயே இரண்டாவது திருமணம் நடத்தி வைத்திருக்கிறார்கள். ஆனால் அவர்களின் கணிப்புக்கு மாறாக முதல் கணவன் உயிருடன் வந்து விட்டதால் திக்குமுக்காடி தட்டுத்தடுமாறி இரண் டாவது திருமணத்தை முறித்து முதல் கணவருடன் வாழும்படி மதத்தீர்ப்பு அளித்துள்ளனர்.

அல்குர்ஆன் போதனைப்படி அந்த அமலைப் பெண்ணின் ‘விவாக விடுதலை’குபாவு கோரிக்கையை ஏற்று அவளை முன்னய கணவனின் பந்தத்திலிருந்து பிரித்து இத்தா இருக்கச் செய்து பின்னர் இரண்டாவது கணவனுக்கு மணம் முடித்துக் கொடுத்திருந்தால் இப்படிப்பட்ட இக்கட்டான நிலை ஏற்பட்டிருக்காது.

இன்று இஸ்லாமிய மார்க்கமும் முஸ்லிம்களும் செய்தி ஊடகங்களில் இழித்தும், பழித்தும் செய்திகள் பரப்பப்படுவதற்கு ஒரே காரணம் இந்த புரோகித மவ்லவிகள் இறைவனின் இறுதி வழிகாட்டி நூலான அல்குர்ஆனின் போதனைகளைப் புறந்தள்ளிவிட்டு இவர்களின் முன்னோர்கலின் கற்பனையில் உருவான சட்டங்களை ‘பிக்ஹ்’ சட்டம் இஸ்லாமிய ஷரீஅத் சட்டம் என்ற பெயரை தலைமேல் தூக்கி வைத்துக்கொண்டு மதத் தீர்ப்பு அளிப்பதாலேயேயாகும்.

தாங்கள் செய்வது தவறு என்பதை அவர்கள் தங்கள் பிள்ளைகளை அறிவது போல் அறிவார்கள் ( ) ஆக அறிந்த நிலையில் தங்கலின் சுய நலத்திற்காகவே இப்படிப்பட்ட அறிவுக்கே பொருந்தாத அநியாயத் தீர்ப்புகளை இஸ்லாமிய ஷரீஅத் தீர்ப்பாக அளிக்கின்றனர். காரணம்

இறைவனின் இறுதி வழிகாட்டி நூலான அல்குர்ஆனின் தெளளத் தெளிவான நேரடியான கட்டளைக்கு முரணாக இவர்கள் மார்க்கத்தைத் தங்களின் பிழைப்புக்குரிய வழியாக தொண்டைத் தொழிலாக ஆக்கியதன் விளைவேயாகும். (பார்க்க 36:21 )

வரதட்சணைக்கொடுமை தலைவிரித்தாடும் இக்கால கட்டத்தில், ஆணுக்கு இரண்டாவது முறையும் வரதட்சணை, சீர் செனத்தி வாங்கும் தீய நோக்கில் பெண்கள் ஸ்டவ் வெடித்து சாவு, தீப்பிடித்து சாவு, நீரில் மூழ்கி சாவு என விதவிதமான கொலை முயற்சிகள் அரங்கேறும் இக்கால கட்டத்தில், அப்படிப்பட்ட அயோக்கியர்களுக்கு இந்தப் புரோகிதர்கலின் இந்த மதத்தீர்ப்பு மேம் ஒரு வாசலைத் திறந்து விட்டிருக்கிறது. மாமனாரே மருமகளை கற்பழித்துவிட்டு அதைச் சாக்காக வைத்து மகனிடமிருந்து மருமகளைப் பிரித்து பிறந்த வீட்டுக்கு அனுப்பி வைத்து விட்டு, தனது மகனுக்கு அடுத்த திருமணத்தை வரதட்சணை, சீர் செனத்தி என வாங்கி ஜாம் ஜாம் என நடத்த நல்ல வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள் இந்தப் புரோகித மவ்லவிகள்.

இஸ்லாத்தில் புரோகிதத்திற்கு அணுவின் முனையளவு கூட அனுமதி இல்லை. இந்த புரோகித மவ்லவிகளுக்கு தூய இஸ்லாமிய மார்க்கத்தில் தீர்ப்பு அளிக்கும் அதிகாரம் உண்டு என்று கூறும் ஒரேயொரு இறைக்கட்டளையையோ, நபி வழி முறையையோ இவர்களால் இறைவனின் இறுதி வழிகாட்டி நூலான அல்குர்ஆனிலிருந்தோ, ஆதாரப்பூர்வமான ஹதீஸிலிருந்தோ காட்ட முடியவே முடியாது.

எனவே முஸ்லிம்கள் இந்தப் புரோகித மவ்லவிகளின் மாய, வஸீகர, உடும்புப் பிடியிலிருந்து விடுபட்டு, இறைவனின் இறுதி வழிகாட்டி நூலான அல்குர்ஆனையும், இறுதித் தூதரின் நடைமுறைகளை எடுத்துச் சொல்ம் ஆதாரப்பூர்வமான ஹதீஸ்களையும் நேரடியாக தன்னம்பிக்கையுடன் சுய சிந்தனையுடன் படித்து விளங்கிச் செயல்பட முன்வந்தால் மட்டுமே முஸ்லிம் சமுதாயம் இப்படிப்பட்ட அவப்பெயர்களிலிருந்து, இழிச் சொல்களிலிருந்தும் விடுபட்டு இவ்வுலகில் நிம்மதியாக, சந்தோசமாக வாழ்வதுடன் நாளை மறுமையிம் ஈடில்லா வெற்றியைப் பெற முடியும் ஒவ்வொரு ஆணும், பெண்ணும் இதை விளங்கிச் செயல்பட முன் வரவேண்டும்.

டிசம்பர் 2005 அந்நஜாத்